# மார்ச் - 15 - புதன்

## புனித லூயிஸ் மகிலாக்

**உமது கையில் என் உயிரை ஒப்படைகின்றேன்: வாக்குப் பிறழாத இறைவனாகிய ஆண்டவரே, நீர் என்னை மீட்டருளுனீர். திபா. 31:5**

---

### முதல் வாசகம் : ஏரேமியா 18 : 18 – 20

அப்போது அவர்கள் "வாருங்கள், எரேமியாவுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்வோம். குருக்களிடமிருந்து சட்டமும், ஞானிகளி டமிருந்து அறிவுரையும், இறைவாக்கினரிடமிருந்து இறைவாக்கும் எடுபடாது. எனவே அவர்மீது குற்றம் சாட்டுவோம். அவர் சொல்வதைக் கேட்கவேண்டாம்" என்றனர். ஆண்டவரே, என்னைக் கவனியும் என் எதிரிகள் சொல்வதைக் கேளும். நன்மைக்குக் கைம்மாறு தீமையா? என் உயிரைப் போக்கக் குழிபறித் திருக்கின்றார்கள் அவர்கள்மேல் உமக்கிருந்த சினத்தைப் போக்குவதற்காக அவர்களைக் குறித்து நல்லதை எடுத்துச் சொல்வதற்கு நான் உம்முன் வந்து நின்றதை நினைவுகூரும்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது பேரன்பால் என்னை விடுவித்தருளும்

### நற்செய்தி: மத்தேயு 20 : 17 – 28

அக்காலத்தில் இயேசு எருசலேமை நோக்கிச் செல்லும் வழியில் பன்னிரு சீடரையும் தனியே அழைத்து, "இப்பொழுது நாம் எருசலேமுக்குச் செல்கிறோம். மானிட மகன் தலைமைக் குருக்களிடமும், மறைநூல் அறிஞர்களிடமும் ஒப்புவிக்கப்படுவார். அவர்கள் அவருக்கு மரண தண்டனை விதிப்பார்கள். அவர்கள் அவரை ஏளனம் செய்து, சாட்டையால் அடித்து, சிலுவையில் அறையும்படி பிற இனத்தவரிடம் ஒப்புவிப்பார்கள். ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார்" என்று அவர்களிடம் கூறினார். பின்பு செபதேயுவின் மனைவி தம் மக்களோடு ஒரு வேண்டுகோள் விடுக்குமாறு இயேசுவிடம் வந்து பணிந்து நின்றார். "உமக்கு என்ன வேண்டும்?" என்று இயேசு அவரிடம் கேட்டார். அவர், "நீர் ஆட்சி புரியும்போது என் மக்களாகிய இவர்கள் இருவருள் ஒருவன் உமது அரியணையின் வலப்புறமும் இன்னொருவன் இடப்புறமும் அமரச் செய்யும்" என்று வேண்டினார். அதற்கு இயேசு, "நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கப்போகும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?" என்று கேட்டார். அவர்கள் "எங்களால் இயலும்" என்றார்கள். அவர் அவர்களை நோக்கி, "ஆம், என் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள். ஆனால் என் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அமரும்படி அருளுவதோ எனது செயல் அல்ல் மாறாக அவ்விடங்களை என் தந்தை யாருக்கு ஏற்பாடு செய்திருக்கிறாரோ அவர்களுக்கே அவை அருளப்படும்" என்றார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த பத்துப்பேரும் அச்சகோதரர் இருவர் மீதும் கோபங் கொண்டனர். இயேசு அவர்களை வரவழைத்து, "பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். உயர்குடி மக்கள் அவர்கள்மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள் இதை நீங்கள் அறிவீர்கள். உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது. உங்களுள் பெரியவராக இருக்கு விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" என்று கூறினார்.

**தியானம்:** 400 ஆண்டுகள் எகிப்து தேசத்தின் அடிமைகளாயிருந்த இஸ்ரவேலரை மோசேயைக் கொண்டு மீட்டு, 40 ஆண்டுகள் வனாந்தரத்தில் சோதித்து பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டிற்கு அழைத்து வந்து ஆண்டவரை மீண்டும் மீண்டும் மறந்து வாழ முற்பட்டதையும், இறைவாக்கினர் எரேமியா மூலம் அவர்களை நல்வழிப்படுத்த முயற்சித்து தோல்வியுற்றதையும் இன்றைய முதல் வாசகத்தில் பார்க்கின்றோம். பிறப்பும் இறப்பும் வாழ்க்கையின் இயல்பான போக்காகும். பிறப்பு நேர்ந்தபின் மரணம் என்றும் எக்கணத்திலும் நேரலாம். பல வருடங்கள் கழித்தும் வரலாம். ஆனால் வரப்போவது என்பது உறுதி. எப்போது மரணம் வரும் என்பதை யாரும் அறியார். ஆனால் இன்றைய இரண்டாம் வாசகதில் இயேசு அறிந்திருந்தார். மரணத்தைக் கண்டு அஞ்சாதவர் இயேசு ஒருவர். ஏனெனில் அவரின் இறப்பு வாழ்வின் முடிவல்ல மறுவாழ்வுக்கான வாயிலாகும். ஆதலால்தான் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார். புனித பவுலடியார் அழகாக மரணத்தைப் பற்றி கூறுகின்றார். விதைபோன்ற மரத்தையோ, தாவரத்தையோ விதைத்ததை கண்டிருக்கின்றாயா? இல்லவேயில்லை விதை மண்ணில் விழுந்து மடிகின்ற பொழுதுதான் மரமாக வளர முடியும். ஆகவே இறக்கும் பொழுது நாமும் புதுவாழ்வு பெற எம்வாழ்வை விசுவாசத்துடன் வாழ வரம்பெற இறைவனிடம் மன்றாடுவோம்.